2014 ஆகஸ்ட் 8]

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையும் துறை ரீதியாக ஆய்வு செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதை குறிக்கும்.]

2. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் அமைப்பு மற்றும் நிதியம் நிறுவி விருதுகள் வழங்குதல், திட்ட மதிப்பீடுகள் செய்ய புரிந்துணர்வு ஒப்பந்தம், ஒருங்கிணைந்த பண்ணை முறையை ஊக்குவித்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன்கீழ் மூன்று அறிக்கைகளை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக ஆக்க வேண்டும் என்ற இலக்கினை அடையும் வகையில், 'தொலைநோக்குத் திட்டம், 2023'-ஐத் தீட்டி, அதைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்துள்ளது.

இதன் ஒரு பகுதியாக, திட்டம் மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் சார்பாக கீழ்க்காணும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்:

1. தமிழ்நாட்டில் புத்தாக்கப் பண்பாட்டை வளர்ப்பதற்காக, அரசுத் துறைகளில் புத்தாக்கத்தை ஊக்குவிப்பதற்கு, மாநில திட்டக் குழுவில் "தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள்" அதாவது Tamil Nadu Innovative Initiative என்ற ஓர் அமைப்பு நிறுவப்படும். முதற்கட்டமாக, இந்த அமைப்பு அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களில் புத்தாக்கத்தை வளர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும். இது, படிப்படியாக அரசுத் துறை

அல்லாத நிறுவனங்களுக்கும் நீட்டிக்கப்படும். புத்தாக்க முயற்சிகளுக்குப் பரிசுகள் வழங்கும் திட்டமும் உருவாக்கப்படும். இதற்கென "மாநில புத்தாக்க நிதியம்" என்ற ஒரு நிதியம் ஏற்படுத்தப்படும். புத்தாக்க முயற்சிகளை உள்ளடக்கிய திட்டங்களுக்கு இந்த நிதியத்திலிருந்து நிதி வழங்கப்படும். இந்த நிதியத்திற்கு ஆண்டுதோறும் 150 கோடி ரூபாய் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) சிறந்த புத்தாக்க முயற்சிகளுக்கு "மாண்புமிகு முதலமைச்சரின் புத்தாக்க விருது" என்ற பெயரில் விருதுகளும் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-30

2. சிறந்த ஆளுமை என்பது நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் அவற்றின் குறிக்கோள்களை எய்தியுள்ளனவா என ஆராய்ந்து, அதன் அடிப்படையில் கொள்கைகளை வகுப்பது ஆகும். எனவே, நடைமுறையில் உள்ள திட்டங்களைக் கண்காணிப்பதற்கும், மதிப்பீடு செய்வதற்கும் ஏதுவாக, மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை மேலும் வலுப்படுத்தப்படும். தற்போது நடைமுறையில் உள்ள திட்டங்களில் இடைக்கால திருத்தங்களை மேற்கொள்ளவும், வருங்காலத்தில் சிறப்பான மற்றும் அதிக பயன் அளிக்கக்கூடிய திட்டங்களை உருவாக்கவும் இது உதவிகரமாக இருக்கும். இதற்காக, அமெரிக்காவிலுள்ள, உலக அளவில் மிகச் சிறந்த கல்வி மற்றும் ஆராய்ச்சி நிலையமான மாசாசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனத்தில் Massachusetts Institute of Technology-MIT-யில் செயல்படும் ஜமீல்-வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வகம் Jameel-Poverty Action Lab-அமைப்புடன் இந்த அரசு ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொள்ளும். பள்ளிக் கல்வி, சுகாதாரம், வறுமை ஒழிப்பு மற்றும் சத்துணவு ஆகிய முக்கியத் துறைகளில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களை மதிப்பீடு மற்றும் திறன் மேம்பாடு செய்ய உலக அளவில் புகழ்பெற்ற சிறந்த பொருளாதார வல்லுநர்கள் மற்றும் சமூக விஞ்ஞானிகள் ஈடுபடுத்தப்படுவர். இதற்காக, நடப்பு நிதியாண்டில் 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. ஒருங்கிணைந்த பண்ணை முறை, வேளாண்மையையும், அதனைச் சார்ந்த தொழில்களையும் ஒன்றிணைத்து விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்க வகைசெய்கிறது. மேலும், இது வேளாண்மையின் உப பொருட்களைச் சிறந்த முறையில்

2014 ஆகஸ்ட் 8] [செல்வி ஜெ ஜெயலலிதா]

பயன்படுத்தவும், ஒரு தொழிலின் கழிவுப் பொருட்களை அடுத்த தொழிலுக்கு இடுபொருளாகப் பயன்படுத்தி உற்பத்தியையும், இலாபத்தையும் அதிகரிக்கவும் வழிவகை செய்கிறது. எனவே, பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள வேப்பூர் வட்டாரம், நாமக்கல் மாவட்டத்திலுள்ள மல்லசமுத்திரம் வட்டாரம், தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள கயத்தாறு, கோவில்பட்டி, ஒட்டப்பிடாரம், புதூர் மற்றும் உடன்குடி வட்டாரங்கள், மதுரை மாவட்டத்தில் கள்ளிக்குடி வட்டாரம், தேனி மாவட்டத்தில் ஆண்டிப்பட்டி, கடமலைக்குண்டு வட்டாரங்கள் மற்றும் திருவாரூர் மாவட்டத்தில் கொரடாச்சேரி மற்றும் கோட்டூர் வட்டாரங்களைச் சேர்ந்த மிக ஏழ்மை நிலைமையில் உள்ள 750 விவசாயிகள் பயன்பெறும் வகையில் 8 கோடியே 16 இலட்சம் ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த பண்ணை முறையை ஊக்குவிக்கும் திட்டம் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இத்திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு மாடு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, பன்றி வளர்ப்பு, கோழி வளர்ப்பு, பண்ணைக் குட்டைகள் அமைத்தல், மண்புழு உரம் தயாரித்தல், சாண எரிவாயு உற்பத்தி ஆகியவற்றுக்காக மானிய உதவி அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், ஒருங்கிணைந்த பண்ணை முறையைப் பின்பற்றத் தேவையான பயிற்சியும் இத்திட்டத்தின்மூலம் அளிக்கப்படும்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள் மூலம், நடைமுறையில் உள்ள திட்டங்கள் மேம்பாடு அடையவும், விவசாயிகளின் வருமானம் பெருகவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) புதிய குடிநீர்த் திட்டங்கள், மூன்றாம் நிலை சுத்திகரிப்பு வசதிகள், சென்னைக்கு மழைநீர் வடிகால் வசதி, உள்ளாட்சி அமைப்புகளில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை மற்றும் அம்மா மக்கள் சேவை மையங்கள் அறிமுகம் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள அனைத்து இல்லங்களிலும் தரமான குடிநீர், குழாய்மூலம் கிடைக்கப்பட வேண்டும் என்ற நிலையை எய்துவதையும், திடக்கழிவு மேலாண்மைத் திட்டங்களை அனைத்துப் பகுதிகளிலும்